| வ.எண் | நாயன்மார் பெயர் | அவதாரத் தலம் |
|---|---|---|
| 1. | தில்லை வாழ் அந்தண்ர் (மூவாயிரமவர்) | தில்லை - சிதம்பரம் |
| 2. | திருநீலகண்ட நாயனார் | திருப்புலீச்சரம் (சித்ச்ம்பரம்) (இளமையாக்கினார் கோயில்) |
| 3. | இயற்பகை நாயனார் | காவிரிப்பூம்பட்டினம் |
| 4. | இளையான்குடி மாற நாயனார் | இளையான்குடி (மதுரை - இராமநாதபுரம் நெடுஞ்சாலையில் பரமக்குடி தாண்டி காரைக்குடி சாலையில் உள்ளது) |
| 5. | மெய்ப்பொருள் நாயனார் | திருக்கோவிலூர் |
| 6. | விறன்மிண்ட நாயனார் | செங்குன்றூர் (செங்கண்ணூர்) (கோட்டயம் - செங்கணாச்சேரி -திருவிள்ளா தாண்டிச்சென்றால் உள்ளது) |
| 7. | அமர்நீதி நாயனார் | பழையாறை (பழையாறைவடதளி) (கும்பகோணம் - ஆவூர்ச் சாலையில் முழையூர் சென்று அடையலாம் - பட்டீச்சரத்திலிருந்து 2 கிமீ தொலைவு) |
| 8. | எறிபத்த நாயனார் | கரூர் |
| 9. | ஏனாதி நாத நாயனார் | எயினனூர் (கும்பகோணம் - மன்னார்குடி சாலையில் மருதாநல்லூர் அடைந்து இடப்புறம் பிரியும் சாலையில் செல்லவேண்டும்) |
| 10. | கண்ணப்ப நாயனார் | உடுப்பூர் (ஆந்திரா மாநிலத்து கடப்பா மாவட்டத்தில் பில்லம்பேட்டை வட்டத்தில் சிற்றூராக பொத்தப்பி உள்ளது. அப்பகுதியில் உள்ளது உடுப்பூர் - உடுக்கூர் என்று அழைக்கப்படுகிறது. அரக்கோணம் - குண்டக்கல் இருப்புப் பாதையில் ராஜாம்பேட்டைக்கு அருகில் உள்ளது) |

| | | |
|---|---|---|
| 11. | குங்கிலியக் கலய நாயனார் | **திருக்கடவூர்** |
| 12. | மானக் கஞ்சாற நாயனார் | **கஞ்சாறூர்**<br>(கஞ்சாறூர் இன்று ஆனந்ததாண்டவபுரம் என்று வழங்குகிறது. மயிலாடுதுறை - சீர்காழி சாலையில் செல்ல வேண்டும்) |
| 13. | அரிவாட்டாய நாயனார் | **கணமங்கலம்**<br>(கணமங்கலம் - திருவாரூர் - திருத்துறைப்பூண்டிச் சாலையில் 3 கிமீ தொலைவில் தண்டலச்சேரி பக்கத்தில் உள்ளது) |
| 14. | ஆனாய நாயனார் | **திருமங்கலம்**<br>(திருமங்கலம் - லால்குடிக்குப் பக்கத்தில் உள்ள தலம்) |
| 15. | மூர்த்தி நாயனார் | **மதுரை** |
| 16. | முருக நாயனார் | **திருப்புகலூர்**<br>(நன்னிலம் - நாகப்பட்டினம் சாலையில் உள்ள தலம்) |
| 17. | உருத்திரபசுபதி நாயனார் | **திருத்தலையூர்**<br>(திருத்தலையூர் - மயிலாடுதுறை - கொல்லுமாங்குடி - காரைக்கால் சாலையில் உள்ள தலம்) |
| 18. | திருநாளைப் போவார் நாயனார் (நந்தனார்) | **ஆதனூர்**<br>(ஆதனூர் - தற்போது ஆதமங்கலம் என்று வழங்குகிறது. திருபுன்கூர் பக்கத்தில் கொள்ளிடக்கரையில் 5 கிமீ தொலைவில் உள்ள தலம்) |
| 19. | திருக்குறிப்புத் தொண்டர் நாயனார் | **காஞ்சிபுரம்**<br>(காஞ்சிபுரத்தில் முத்தீசுரர் திருக்கோயில் - காந்திசாலை கடைவீதியில் உள்ள தலம்) |

| | | |
|---|---|---|
| 20. | சண்டேசுர நாயனார் | **சேய்ஞலூர் - சேங்கனூர்**<br>(கும்பகோண்ம் - திருப்பனந்தாள் சாலையில் நெடுங்கொல்லை கிராமம் அடுத்து சேங்கனூர் கூட்டுச் சாலை உள்ளது) |
| 21. | திருநாவுக்கரசு நாயனார் | **திருவாமூர்**<br>(பண்ரூட்டியிலிருந்து மடப்பட்டு/திருவண்ணாமலை செல்லும் சாலையில் 7 ஆவது கிமீல் உள்ளது) |
| 22. | குலச்சிறை நாயனார் | **மணமேற்குடி**<br>(ஆவுடையார் கோயில் - திருப்பெருந்துறை தென்கிழக்கில் 26 கிமீ தொலைவில் உள்ளது) |
| 23. | பெருமிழலைக் குறும்பர் நாயனார் | **பெருமிழலை**<br>(புதுக்கோட்டையிலிருந்து 7 கிமீ தொலைவில் உள்ள தலம்) |
| 24. | காரைக்காலம்மையார் (பேயார்) | **காரைக்கால்** |
| 25. | அப்பூதியடிகள் நாயனார் | **திங்களூர்**<br>(திருவையாறு - கும்பகோணம் சாலையில் உள்ள தலம்) |
| 26. | திருநீலநக்க நாயனார் | **சாத்தமங்கை**<br>(சாத்தமங்கை - சீயாத்தமங்கை என்று வழங்குகிறது. திருமருகல் - நாகூர் சாலையில் 1 கிமீ சென்று பிரியும் சாலையில் 1 கிமீ சென்று தலத்தை அடையலாம்) |
| 27. | நமிநந்தியடிகள் நாயனார் | **ஏமப்பேறூர்**<br>(ஏமப்பேறூர் - தற்போது திருநெய்பேறு என்று வழங்குகிறது. திருவாரூர் - திருத்துறைப்பூண்டி சாலையில் 8 கிமீ தொலைவில் உள்ள தலம்) |
| 28. | திருஞானசம்பந்தர் | **சீர்காழி** |

| | | |
|---|---|---|
| 29. | **ஏயர்கோன் கலிக்காம நாயனார்** | **திருப்பெருமங்கலம்**<br>(வைத்தீஸ்வரன் கோயில் - திருப்பனந்தாள் சாலையில் 3 கிமீ தொலைவில் திருபுன்கூர் சிவலோகநாத சுவாமி கோயில் வளைவின் எதிர்புரம் சாலையில் செல்ல வேண்டும்) |
| 30. | **திருமூலர்** | **சாத்தனூர்**<br>(சிவயோகியார் மூலனின் உடலில் கூடுவிட்டு கூடு பாய்ந்து திருமூலர் ஆன இடம். திருவாவடுதுறைக்குப் பக்கத்தில் உள்ள தலம். மயிலாடுதுறை - கும்பகோணம் சாலையில் உள்ளது) |
| 31. | **தண்டியடிகள் நாயனார்** | **திருவாரூர்** |
| 32. | **மூர்க்க நாயனார்** | **திருவேற்காடு** |
| 33. | **சோமாசிமாற நாயனார்** | **திருஅம்பர்**<br>(மயிலாடுதுறை - திருவாரூர் சாலையில் பேரளம் தாண்டி பூந்தோட்டம் வந்து 'காரைக்கல்' என்று வழிகாட்டி உள்ள இடத்தில் சென்று ரயில்வேகேட்டை தாண்டி 4 கிமீ சென்றால் இத்தலத்தை அடையலாம்) |
| 34. | **சாக்கிய நாயனார்** | **சங்கமங்கை**<br>(இத்தலம் எதுவென்று தெரியவில்லை. காஞ்சியில் உள்ள வீரட்டகாசம் திருக்கோயிலே சாக்கியர் வழிபட்ட கோயிலாகும்) |
| 35. | **சிறப்புலி நாயனார்** | **திருஆக்கூர்**<br>(மயிலாடுதுறை - பொறையாறு பேருந்து வழியில் உள்ள தலம்) |
| 36. | **சிறுதொண்டர் நாயனார்** | **திருச்செங்காட்டங்குடி**<br>(திருவாரூர் - திருமருகல் சாலையில் உள்ள தலம்) |
| 37. | **கழற்றறிவார் நாயனார்**<br>**(சேரமான் பெருமான் நாயனார்)** | **கொடுங்கோளூர்**<br>(திருவஞ்சைக்களம் - ஸ்ரீ வாஞ்சிகுளம் என்று வழங்குகிறது. திருச்சூரிலிருந்து 32 கிமீ) |

| | | |
|---|---|---|
| 38. | கணநாத நாயனார் | சீர்காழி |
| 39. | கூற்றுவ நாயனார் | களந்தை<br>(களந்தை - களப்பால் என்று வழங்குகிறது. மன்னார்குடி - திருத்திறைப்பூண்டி சாலையில் திருப்பத்தூர் சாலையில் திரும்பி களப்பாலை அடையலாம். திருத்துறைப்பூண்டியிலிருந்து 10 கிமீ) |
| 40. | பொய்யடிமையில்லாத புலவர்<br>(தொகையடியார்) | |
| 41. | புகழ்சோழ நாயனார் | உறையூர்<br>(திருச்சி நகரின் ஒரு பகுதி) |
| 42. | நரசிங்க முனையரைய நாயனார் | திருநாவலூர்<br>(சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் விழுப்புரம் தாண்டி உளுந்தூர் பேட்டைக்கு முன்பாக இத்தலம் உள்ளது) |
| 43. | அதிபத்த நாயனார் | நாகப்பட்டினம் |
| 44. | கலிக்கம்ப நாயனார் | பெண்ணாகடம்<br>(விருத்தாசலம் - திட்டக்குடி சாலையில் விருத்தாசலத்திலிருந்து 17 கிமீ தொலைவில் உள்ள தலம்) |
| 45. | கலிய நாயனார் | திருவொற்றியூர் - சென்னை |
| 46. | சக்தி நாயனார் | வரிஞ்சையூர்<br>(வரிஞ்சையூர் - இரிஞ்சியூர் என்று வழங்குகிறது. திருவாரூர் - நாகை சாலையில் கீவளூர் (கீழ்வேளூர்) வந்து இருப்புப்பாதையை தாண்டி தேவூர், வெண்மணி அடைந்து இடப்புறம் பிரியும் சாலையில் 1 கிமீ வந்தால் இத்தலம் உள்ளது) |

| | | |
|---|---|---|
| 47. | **ஐயடிகள் காடவர்கோன்** | இந்நாயனாரின் அவதாரத்தலம் தெரியவில்லை<br>(பல்லவர் மரபில் தோன்றி **காஞ்சி**யிலிருந்து அரசாண்டார்) |
| 48. | **கணம்புல்ல நாயனார்** | **இருக்குவேளூர் - பேளூர்**<br>(சேலம் - ஆத்தூர் சாலையில் வாழப்பாடியிலிருந்து 7 கிமீ தொலைவில் இத்தலம் உள்ளது) |
| 49. | **காரி நாயனார்** | **திருக்கடவூர்** |
| 50. | **நின்றசீர்நெடுமாற நாயனார்** | **மதுரை** |
| 51. | **வாயிலார் நாயனார்** | **மயிலை - சென்னை** |
| 52. | **முனையடுவார் நாயனார்** | **நீடூர்**<br>(மயிலாடுதுறை பக்கத்தில் உள்ள தலம்) |
| 53. | **கழற்சிங்க நாயனார்** | இந்நாயனாரின் அவதாரத்தலம் தெரியவில்லை<br>(தெள்ளாறெறிந்த மூன்றாம் நந்திவர்மன் என்பர்) |
| 54. | **இடங்கழி நாயனார்** | **கொடும்பாளூர்**<br>(விராலிமலையிலிருந்து துவரங்குறிச்சி மேலூர் வழியாக மதுரை செல்லும் சாலையில் விராலிமலையிலிருந்து 5 கிமீ தொலைவில் உள்ள தலம்) |
| 55. | **செருத்துணை நாயனார்** | **மருகல் தஞ்சாவூர்**<br>(மருகல் நாட்டுத் தஞ்சாவூர் இன்று கீழைத் தஞ்சாவூர் என்று அழைக்கப்படுகிறது. திருவாரூர் - திருமருகல் (வழி) கங்களான்சேரி - திருப்பயத்தங்குடி வழியாக -புத்தகரம் பாலம் வந்து வலப்பால் திரும்பி இத்தலம் அடையலாம்) |

| | | |
|---|---|---|
| 56. | புகழ்துணை நாயனார் | செருவிலிபுத்தூர்<br>(செருவிலிபுத்தூர் - இன்று அரிசிற்கரைபுத்தூர் என்றும் அழகாபுத்தூர் என்றும் அழைக்கப்படுகிறது. கும்பகோணம் - நாச்சியார்கோயில் சாலையில் திருநறையூருக்கு முன்பு உள்ள தலம்) |
| 57. | கோட்புலி நாயனார் | நாட்டியத்தான்குடி<br>(நாட்டியத்தான்குடி - திருவாரூர் - திருத்துறைப்பூண்டி சாலையில் மாவூர் கூட்டுச் சாலையில் வந்து வடபாதிமங்கலம் சலையில் சென்றால் இத்தலம் அடையலாம்) |
| 58. | பத்தராய்ப் பணிவார்கள்<br>(தொகையடியார்) | |
| 59. | பரமனையே பாடுவார்<br>(தொகையடியார்) | |
| 60. | சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்<br>(தொகையடியார்) | |
| 61. | திருவாரூரில் பிறந்தார்<br>(தொகையடியார்) | |
| 62. | முப்போதும் திருமேனி தீண்டுவார்<br>(தொகையடியார்) | |
| 63. | முழுநீறு பூசிய முனிவர்<br>(தொகையடியார்) | |
| 64. | அப்பாலும் அடிசார்ந்தார்<br>(தொகையடியார்) | |
| 65. | பூசலார் நாயனார் | திருநின்றவூர்<br>(சென்னை - அரக்கோணம் மின்வண்டி மார்க்கத்தில் பட்டாபிராம் அடுத்துள்ள மின்வண்டி நிலையம்) |

| | | |
|---|---|---|
| 66. | **மங்கையர்க்கரசியார்** | **பழையாறைவடதளி**<br>(கும்பகோணம் - ஆவூர்ச் சாலையில் முழையூர் சென்று அடையலாம் - பட்டீச்சரத்திலிருந்து 2 கிமீ தொலைவு) |
| 67. | **நேச நாயனார்** | **காம்பீலி**<br>(கர்நாடகத்தில் பெல்லாரி மாவட்டத்தில் ஹம்பி விஜயநகரத்திற்கு வடக்கில் துங்கபத்திரை நதிக்கரையில் சுமார் 40கிமீ தொலைவில் உள்ளது) |
| 68. | **கோச்செங்கட்சோழ நாயனார்** | இந்நாயனாரின் அவதாரத்தலம் தெரியவில்லை<br>(**திருவானைக்காவல்** வரலாற்றில் முற்பிறவியில் சிலந்தியாக சிவனுக்குத் தொண்டு செய்தமையால் அரசனாகப் பிறக்கும் பேறு பெற்றார். யானை ஒன்று சிவனுக்குத் தொண்டாற்றும் வேளை சிலந்தி அமைத்த பந்தலை துய்த்ததால் பகை ஏற்பட்டு, சிலந்தி யனையை மாய்த்து தானும் மாண்டது. இதன்பின்னணியில் கோச்செங்கட்சோழன் மாடக்கோயில்களாக யானையேறாதவாறு 70 அமைத்தான்) |
| 69. | **திருநீலகண்ட யாழ்ப்பாணர்** | **எருகத்தம்புலியூர்**<br>**(இராஜேந்திரப் பட்டணம்)**<br>(விருத்தாச்சலம் - ஜெயம்கொண்டம் சாலையில் உள்ள தலம்) |
| 70. | **சடைய நாயனார்** | **திருநாவலூர்**<br>(சுந்தரரின் தந்தையார். சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் விழுப்புரம் தாண்டி உளுந்தூர் பேட்டைக்கு முன்பாக இத்தலம் உள்ளது) |

| | | |
|---|---|---|
| 71. | **இசைஞானியார்** | இந்நாயனாரின் அவதாரத்தலம் தெரியவில்லை<br>(சுந்தரரின் தாயார். சடயனாரின் துணைவியார்) |
| 72. | **சுந்தரமூர்த்தி நாயனார்** | **திருநாவலூர்**<br>(சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் விழுப்புரம் தாண்டி உளுந்தூர் பேட்டைக்கு முன்பாக இத்தலம் உள்ளது) |
| 73. | **மாணிக்கவாசகர்** | **திருவாதவூர்**<br>(மதுரையிலிருந்து 22கிமீ தொலைவு. மதுரை - மேலூர்/திருச்சி சாலையில் உள்ள தலம் |
| 74. | **சேக்கிழார்** | **குன்றத்தூர்**<br>(சென்னை போரூருக்கு அடுத்துள்ள தலம்) |
| 75. | **நம்பியாண்டார் நம்பி** | **திருநாரையூர்**<br>(சிதம்பரம் - காட்டுமன்னார்குடி சாலையில் குமராட்சியை அடுத்து திருநாரையூருக்குச் செல்லும் சாலையில் செல்ல வேண்டும்) |